# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை – 2021(2022)

மேற்படி பரீட்சை 2022 மே மாதம் 23ஆம் திகதி ஆரம்பமாகி ஜூன் மாதம் 01ஆம் திகதி வரை நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகிறது.

பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள், நேர அட்டவணைகள் ஆகியன உரிய பாடசாலைகளின் அதிபர்களுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அவர்கள் தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கும் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

2022 மே மாதம் 17ஆம் திகதி வரை அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலை இலக்கம், பாடசாலையின் பெயர், முகவரி போன்ற உரிய தகவல்கள் உள்ளடங்கலாக கடிதமொன்றையோ அல்லது தொலைநகல் மூலமோ எனக்கு அறியத்தரல் வேண்டும். தனிப்பட்ட பரீட்சார்த்திகளாயின் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்பட்ட இறுதித்திகதியில் அல்லது அதற்கு முன்னர் நிகழ்நிலையில் விண்ணப்பித்திருப்பின் அவ்விண்ணப்பப்படிவத்தின் பிரதி, விண்ணப்பப்படிவத்தை அனுப்பிய பதிவுத்தபாலின் பற்றுச்சீட்டு, பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் நிழற்பிரதி அல்லது பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான தபால் அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் ஆகியவற்றுடனும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு உடனடியாக கடிதம் மூலம் அறியத்தரவும். அல்லது நேரடியாக வருகை தந்தும் பெற்றுக் கொள்ள முடியும். பாடசாலை அதிபர்களும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இது தொடர்பாக அதிகூடிய கவனத்தைச் செலுத்தும்படி இத்தால் அறியத்தரப்படுகிறது.

அதிபர்களுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் கிடைக்கப்பெற்றுள்ள அனுமதி அட்டைகளில் பாடங்களில் திருத்தம், மொழிமூலத்தில் திருத்தம், பெயர் திருத்தம் ஆகியன செய்ய வேண்டியிருப்பின்:

- **சகல மாற்றங்களையும் நிகழ்நிலையில் மேற்கொள்ள வேண்டும். இதற்காக http://onlineexams.gov.lk/eic என்ற இணையத்தளத்திற்குப் பிரவேசித்தல் வேண்டும்.**
- **ஒரு பரீட்சார்த்தி ஒரு தடவை மாத்திரமே மாற்றங்களைச் செய்ய முடியும்.**
- **முறையான பரீட்சிப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட பெயர் மாற்றங்கள் மாத்திரம் தரவுத்தளத்தில் இற்றைப்படுத்தப்படும்.**
- **பரீட்சை நிலைய மாற்றங்கள் செய்யப்படமாட்டாது.**

**பரீட்சார்த்தி ஒருவருக்குப் பதிலாக வேறொருவர் பரீட்சைக்குத் தோற்றுதல், புத்தகங்கள், குறிப்புக்கள், இலத்திரனியல் சாதனங்களை (உதா:- செல்லிடத் தொலைபேசி, ஸ்மாட் கடிகாரம்....... ஆகியன) பரீட்சை மண்டபத்திற்குள் எடுத்து வருதல், பயன்படுத்துதல், வேறு பரீட்சார்த்திகளின் உதவியைப் பெறுதல், உதவியளித்தல், பரீட்சை மண்டபத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும் முறையற்ற நடத்தைகளில் ஈடுபடல் ஆகியன பரீட்சைச் சட்ட விதிகளின்படி தண்டனைக்குரிய குற்றமாகும். இப்பரீட்சையில் கணித்தற் பொறிகளையும் அழிமையையும் (correcting fluid) உபயோகிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது.**

**விசாரணைகள்:**

| | |
|---|---|
| தொலைபேசி எண் | : 011-2784208, 2784537 |
| தொலைநகல் எண் | : 011 - 2784422 |
| தபால் முகவரி | : பரீட்சை ஆணையாளர் நாயகம், பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை, தபாற் பெட்டி இல. 1503, கொழும்பு. |

**பரீட்சைக் காலங்களில் 24 மணித்தியாலமும் விசாரணைகளுக்காகச் செயற்படும்**
**தொலைபேசி இலக்கங்கள் : 0112785211, 0112785212, 0112784208, 0112784537**
**அவசர அழைப்பு இலக்கம் 1911**

**6/4/சா.தரம்/2021**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**
**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை**
**பெலவத்தை, பத்தரமுல்ல.**
**2022.05.06 ஆம் திகதி**

**எல்.எம்.டீ. தர்மசேன**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**